# பிரபாவின் குற்றச்சாட்டுக்கள் நியாயமானவை

**- வாசு கூறுகிறார்**

6-3-1995

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 22 இதழ் 24
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 6-3-1995

(கொழும்பு)
அரசாங்கத்தின் மீது புலிகள் தலைவர் பிரபாகரன் சுமத்திய குற்றச்சாட்டுகள் உண்மையானவை என்று நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வாசுதேவ நாணயக்கார, பி.பி.சி. சிங்களச் சேவைக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறியடையுமானால், இராணுவத்தினர் யுத்தத்திற்கு ஆயத்தமாக வேண்டும் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த கூறிய கருத்துக்கள்,

(4ம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதிகளின் நிலை மோசமடைகிறது

(யாழ்ப்பாணம்)
5வது நாளாகத் தொடர்ந்து உண்ணாவிரதம் இருக்கும் யுத்தக் கைதிகளின் உடல் நிலை நேற்று மோசமடைந்துள்ளதாகவும், ஒருசிலரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாகவும் மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

யுத்தக் கைதிகளின் உடல் நிலை தொடர்பாகவும், அவர்களின் கோரிக்கைகள் தொடர்பாகவும் அரசாங்கம் அறிந்திருந்தும் இதுவரையில் ஆக்கபூர்வமான முயற்சிகள் எதுவும் மேற்கொண்டதாகத் தகவல் இல்லை.

(4-ம் பக்கம் பார்க்க)

# அலுவலகத்தில் வைத்து பிரதி அமைச்சர் எக்கநாயகாவை படுகொலை செய்ய முயற்சி!

## துப்பாக்கி நபர் கைது

[கொழும்பு]
காணி வனவள பிரதி அமைச்சர் திரு. நந்தமித்திர எக்கநாயக்காவை படுகொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சி ஒன்று முறியடிக்கப்பட்டுள்ளதாகவும் சந்தேகநபர் ஒருவர் நேற்று மாலை துப்பாக்கி சகிதம் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(4ம் பக்கம் பார்க்க)

## பிரபாவை சந்திக்க வெளிநாட்டு குழு விருப்பம்

(கொழும்பு)
நாளை யாழ்ப்பாணம் வரவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிகள் குழு, விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனை சந்திக்க விருப்பம் தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க ஏற்பாட்டில நாளைக்

(4ம் பக்கம் பார்க்க)

## தீர்வுத் திட்டம் குறித்து புலிகளுக்கு அறிவிப்பு - சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)
இனப்பிரச்னைத் தீர்வு தொடர்பாக பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் சமரசதீர்வுத்திட்டம் ஒன்று தயாரித்துள்ளதாகவும் உத்தேச இத்திட்டம் குறித்து விடுதலைப் புலிகளுக்கு அறிவித்துள்ளதாகவும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

திருமலையில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு

(4ம் பக்கம் பார்சுக)

## அரச பிரதிநிதி இன்று யாழ். வருகிறார்?

(கொழும்பு)
அரசுப் பிரதிநிதியாக திரு. பாக்கியநாதன் இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளதாக இலங்கை வானொலி தெரிவித்தது.

யாழ். அரச அதிபர் க. பொன்னம்பலம் மற்றும் அரச உயர் அதிகாரிகளுடன் விரிவான முறையில் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ள இவர் பேச்சுவார்த்தையின் விபரங்கள் குறித்து உடனடியாக அரசாங்கத்திற்கு எடுத்து விளக்குவார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஆயினும் இப்பிரதிநிதி எவ்விடயங்கள் குறித்து பேச்சு நடாத்துவார் என்பது பற்றிய விபரம் எதுவும் நேற்று வெளியிடப்படவில்லை. -க-சி

## சகல அம்சங்களையும் பெற்ற ஒரு இனமாக நாம் உள்ளோம்

**— தமிழ்ச்செல்வன் உரை**

(யாழ்ப்பாணம்)
ஒரு தேசிய சுயநிர்ணய உரிமை உள்ள இனத்துக்குரிய சகல அம்சங்களை நாங்கள் பெற்றுள்ளோம். எனவே தான் எமது போராட்டத்தில் நாம் தளராது இருக்கிறோம். மக்களும் தளராது இருக்கின்றார்கள் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

நல்லூர் இளம் கலைஞர் மண்டபத்தில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகமும், வெளிச்சமும் இணைந்து நடாத்திய கருத்தரங்கின் இறுதி நாள் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே திரு. தமிழ்ச் செல்வன் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர்

(4ம் பக்கம் பார்க்க]

## பூநகரி முகாமில் சிப்பாய் உயிரிழப்பு

(கொழும்பு)
பூநகரி இராணுவ முகாமில் கிரனேட் வெடித்ததில இராணுவ சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இராணுவ சிப்பாய் ஒருவர் தனது பொக்கற்றுள் வைத்திருந்த கிரனேட் தற்செயலாக வெடித்தபோதே இவர் உயிரிழந்தார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை பூநகரி முகாமில் இடம்பெற்றதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

★ தெரிவுக்குழுவிடம்

## மூன்று விடயங்களை கூட்டணி வலியுறுத்தும்

(கொழும்பு)
வடக்கு - கிழக்கு மாகாண நிரந்தர இணைப்பு, சமஷ்டி முறை அரசியலமைப்பு, வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு கூடுதலான அதிகார பரவலாக்கல் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி வற்புறுத்தவுள்ளது.

அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழு முன் 9ம் திகதி வியாழக்கிழமை தமிழர் விடுதலைக் கூட்டணி சாட்சியமளிக்கவுள்ளது.

இதன்போதே கூட்டணி

( 4-ம் பக்கம் பார்க்க)

## மீண்டும் போர் வெடிக்கும் அபாயம் அதிகரித்துள்ளது!

**— 'ஏ. எவ். பி.' தகவல்**

(கொழும்பு)
விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்குமிடையில் மீண்டும் போர் வெடிக்கும் அபாயம் அதிகரித்துள்ளதாக 'ஏ. எவ். பி செய்தி தெரிவித்துள்ளது.

இது பற்றி 'ஏ. எவ். பி, மேலும் கூறுகையில்: இரு தரப்புமே போருக்கு தயாராகிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக போரில் ஈடுபட இராணுவத்தை தயாராயிருக்குமாறு பிரதிபாதுகாப்பு

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatit s) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1397)

### 6 அதிபர் இடமாற்றம்

[நெல்லியடி]

புலோலி தெற்கு புற்றளை மகாவித்தியாலயத்தில் கடந்த 1987முதல் 1995 வரையிலான சுமார் எட்டு வருட காலத்தினுள் ஆறு அதிபர்கள் நியமிக்கப்பட்டு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். -160

### காகிதாதிகள் வந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு காகிதாதிகள் உபகரணங்கள் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

தேசிய அடையாள அட்டை விண்ணப்பப்படிவங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் ஒரு தொகுதி தேசிய அடையாள அட்டை விண்ணப்பப்படிவங்களும் இக்கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. -162

### மூன்றாவது ஆட்டோ

(நெல்லியடி)

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்திற்கு மூன்றாவதாக ஒரு புதிய ஆட்டோ கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளது.

ஏற்கனவே இத்திணைக்களத்திற்கு வலயம் 1, வலயம் 2 ஆகியவைக்கு இரண்டு ஆட்டோக்கள் பயன்படுத்தப்பட்டுவருகின்றன. (160)

### அறிவியல் அரங்கு

(கொழும்புத்துறை)

சரசாலை இந்துமன்றத்தால் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் ஓர் அறிவியல் அரங்கு அண்மையில்நடாத்தப்பட்டது கல்லூரி அதிபர் க. சந்திரசேகரா தலைமையில் இடம்பெற்றவைபவத்தில் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவா பேராசிரியர் அ. சண்முகதாஸ் ''தமிழர்பண்பாடு'' என்ற தலைப்பில சிறப்புரையாற்றினார். 154

### ஜனவரிமாத நிவாரணம்

(ஆனைப்பந்தி]

இடம்பெயர்ந்தோருக்கான இவ்வருட ஜனவரி மாத முதல் இரண்டு வார நிவாரண உலர் உணவுப் பொருட்களாக அரிசி, மாவு, சீனி, மைசூர் பருப்பு, அவல் கைலண்ட் பால் மாப்பைக் கற்றுகள் உழுந்து என்பன வழங்கப்படுமென யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியின் விநியோகப் பட்டியலில் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய நிவாரண உணவு முத்திரையின் 237 இலக்க புள்ளிக்கு மேற்படி விநியோகம் மேற்கொள்ளப்படும். (101)

## யாழ். மாநகர எல்லைக்குள் 85 சதவித மாணவர்கள் நோய்களினால் பாதிப்பு

(கொழும்புத்துறை)

யாழ், மாநகரசபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் யாழ். சுகாதார அத்தியட்சகர் பிரிவினர் மேற்கொண்ட ஆய்வுகளில் சுமார் 85 சதவீத மாணவர்கள் நோய் தாக்கத்தினால் பாதிப்பு அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருட அக்டோபர், நவம்பர், டிகம்பர் மாதங்களில் யாழ். மாநகரசபை பிரிவுக்குள் உட்பட்ட சில பாடசாலைகளின் முதலாம் ஆண்டு, ஏழாம் ஆண்டு மாணவ, மாணவிகளிடம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

பற்சூத்தை நோயினால் 47 சதவீத மாணவ மாணவிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு அடிப்படை காரணம் பற்கள் ஒழுங்காக பேணப்படாமையினால் என தெரிவிக்கப்படுகின்றது. உலர் கண் நோயினால் சுமார் 24 சதவீத மாணவர்கள் பாதிப்பு அடைந்துள்ளனர்.

வயதிற்கு ஏற்ற நிறையும் உயரமும் அற்ற நிலையில் 4. 39 சதவீத மாணவர்கள் காணப்படுகின்றனர். சுவாசதொகுதி நோயினால் 3.69 மாணவர்களும் கண்ணில்வெள்ளைப்படை பரவுதல் நோயினால் 3 சதவீத மாணவர்களும் 2 சதவீத மாணவர்கள் கண்பார்வை குறைபாட்டினால் பாதிப்படைந்துள்ளனர். குருதி சோகை நோயினால் 2 சதவீத மாணவர்ாளும், பேச்சுக்குறைபாட்டினால் 0 28 சதவீத மாணவர்களும் பாதிப்படைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. - 154

### பஸ் — லொறி விபத்தில் 17 பேர் பலி

(சென்னை)

தமிழகம் கோயம்புத்தூரில் இடம்பெற்ற பஸ் - லொறி விபத்தொன்றில் 17 பேர் கொல்லப்பட்டனர். 33 பேர் காயமடைந்தனர் என்று தெரிவிககப்படுகிறது.

அந்த பஸ்ஸில் நூறு பேர் பயணம் செய்தனர். -ம

### பாராட்டு

[கொழும்புத்துறை]

திருநெல்வேலி கிழக்கு ஸ்ரீ பூதநாதசுவாமி தேவஸ்தானத்தில் இடம்பெற்ற வருடாந்த அலங்கார உற்சவ காலத்தில் 'திருவிளையாடற் புராண' தொடர் இசைச் சொற்பொழிவு நிகழ்த்திய அருளமொழி அரசு பரமஸ்ரீ சிவ வை நித்தியானந்த சர்மாவை பூர்த்தி விழாவன்று பொன்னாடைபோர்த்தி பாராட்டி தேவஸ்தானம் கௌரவித்தது, 154

## திருமலையில் 27,000 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன

[கொழும்பு]

இனப்பிரச்சினை காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் 27,000குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

இவர்கள் வெளியிடங்களில் தஞ்சமடைந்துள்ளதாகவும் இவர்களை மீளக்குடிபேற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. ரி

## கடந்த வருடம் மட்டும் யாழ். வைத்தியசாலையில் 1408 பேர் மரணம்

(கொழும்புத்துறை)

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த 1994-ம் ஆண்டு மட்டும் 1408 பேர்கள் மரணம் அடைந்துள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இம்மரணங்களில் 50 சதவீதமானவற்றில் குழந்தைகளின் மரணம். தற்கொலைகள், விபத்துகள் மற்றும் மாரடைப்பு என்பன உள்ளடங்குகின்றன.

இதேவேளை கடந்த 1994ம் ஆண்டில் வெளி நோயாளர் பிரிவில் மூன்று இலட்சத்து முப்பதாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் கிகிச்சை பெற்றது குறிப்பிடத்தக்கது. -154-ரி

## பாதுகாப்பு அதிகாரிகள் மட்டு. நகருக்கு விஜயம்

[கொழும்பு]

பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அநுருத்த ரத்வத்த, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. சந்திரானந்த டீ செல்வா, ஜனாதிபதியின் செயலாளர் திரு. பாலபத்த பெண்டி, பொலிஸ்மா அதிபர், விமானப்படைத் தளபதி, இராணுவ தளபதி ஆகியோர் மட்டக்களப்புக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்தனர்.

மட்டக்களப்பு பகுதியில் பாதுகாப்பபடையினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகளை சந்தித்தஅவர்கள்படைமுகாம்களையும்நேரில்சென்றுபார்வையிட்டதாக தெரியவருகிறது. ரிசி

## கட்டுநாயக்காவில் 45 தமிழர் கைது

[கொழும்பு]

கட்டுநாயக்கா விமான நிலையப் பகுதியில் 45 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புகைப்படக் கருவியுடன் இவர்கள் விமான நிலையம் சென்றதாலேயே கைதுசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கொழும்பில் புகைப்பட கருவியுடன் நடமாடும் தமிழர்கள் தொடர்ந்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

மட்டு நகரைச் சேர்ந்த ஒரு தம்பதிகள் உட்பட பலா இவ்வாறு கைது செய்யப்பட்டு துரித விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். ரி

### நிவாரணம்

[அரயாலை[

பல்வேறு பகுதிகளிலிருந்தும் இடம்பெயர்ந்து யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ள மக்களுக்கு இடம் பெயர்ந்தோருக்கான இலவச நிவாரணம் அந்தந்த மாதங்களில் வழங்குவதற்கான நடவடிக்கைகளை புனர்வாழ்வு பகுதி எடுத்துள்ளதாக தெரியவருகின்றது. 59

### கண் சிகிச்சை கிளினிக்

(நெல்லியடி)

யாழ். போதனா வைத்தியசாலையின் கண் வைத்திய நிபுணர் டாக்டர் சு. குகதாசனின் கண்சிகிச்சை கிளினிக் இம்மாதம் 17ம் திகதி மந்திகை மருத்துவ மனையில் நடைபெறவிருக்கின்றது. 160

## நிவாரணம் வழங்குமாறு ஊழியர் கோரிக்கை

(நெல்லியடி)

இராணுவ நடவடிக்கைகளினால் எமது வைத்தியசாலை திடீரென மூடப்பட்டமையாலும், 1990 லிருந்து வீடு, வாசல்களை இழந்து நிர்க்கதிக்குள்ளாகியிருக்கும் எமக்குக் கடந்த நான்குமாத வேதனத்தையும், 18 மாத ஊக்குவிப்பு பணத்தையும், ஆறு வருடங்களுக்குரிய ஊழியர்களின் சீருடைகளையும் உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கவும்''

இவ்வாறு யாழ். மார்பு நோய் சிகிச்சை பிரிவுக்குட்பட்ட பருத்தித்துறை, தெல்லிப்பழை, கோப்பாய், பளை ஆகிய வைத்தியசாலைகளுக்கு இடமாற்றலாகிப் பாதிக்கப்பட்டிருக்கும் சுமார் 20 க்கு மேற்பட்ட ஊழியர்களினால் ஒப்பமிடப்பட்ட மகஜர் யாழ். நீதி நிர்வாக பொறுப்பாளர் யாழ். அரச அதிபர், மார்பு நோய் சிகிச்சைப் பிரிவுப் பொறுப்பாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இராணுவ நடவடிக்கையினால் மயிலிட்டி மார்புநோய் வைத்தியசாலை மூடப்பட்டதனால் எமது ஊழியர்கள் பல்வேறு பகுதியிலும் கடமை புரிந்து வருகின்றார்கள்.

வேறு வைத்தியசாலை ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுவரும் பல அரச சலுகைகளும், நாம் பெறாத நிலையில் திண்டாடுகின்றோம். எனவே எம்மைப் புறக்கணிக்காது குறிப்பிட்ட குறைபாடுகளை வெகு விரைவில தீர்த்து வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

-160-சி

### சைக்கிள் திருட்டு

[ஆனைப்பந்தி]

கடையொன்றின் முன்னால் சைக்கிளை நிறுத்திவிட்டு உள்ளேசென்ற அரியாலையைச் சேர்ந்த ரஞ்சன் என்பவரது சைக்கிளும், வண்ணை. சிவன் கோவிலின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருநத சின்னத்துரை ரூபராஜா என்பவரது சைக்கிளும் கடந்தமாதம் 28ம் திகதி திருட்டுப்போயுள்ளதாக யாழ்.காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். 101

### விளையாட்டு போட்டி

(யாழ்ப்பாணம்)

அராலி சரஸ்வதி ம. வித்தியாலயத்தின் வருடாந்தஇல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் வித்தியாலய அதிபர் திருமதி கோ. அம்பலவாணர் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக யாழ் கல்வி வலயம் இரண்டின் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. வே. மகேந்திரன் கலந்து கொண்டார்.

இப்போட்டியில் கலைமகள் இல்லம் முதலாமிடத்தையும், மலைமகள் இல்லம் இரண்டாமிடத்தையும் அலைமகள் இல்லம் மூன்றாமிடத்தையும் பெற்றன.

### சிறுதானியச் செய்கை

(யாழப்பாணம்)

காலபோக நெற்செய்கையின் பின் பெருமளவு நிலங்கள் நல்ல ஈரலிப்பு உள்ளதாக இருப்பதனால் நல்ல முறையில் சிறுதானியம் செய்கை பண்ணக்கூடியதாக உள்ளதால் இலகுவாக பயிரிடகூடிய பயிர்களான எள்ளு, பயறு, கௌபி ஆகிய சிறுதானியங்களை பயிர்செய்ப தயாராகுமாறும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்திக் குறிப்பொன்றில் தெரிவித்துள்ளது.

இக்காலப்பகுதியில் பொது மக்கள் கட்டாக்காலிகளாக அவிழ்த்துவிடும் கால்நடைகளை கட்டுப்படுத்திசிறுதானிய உற்பத்திக்கு ஒதத்துழைப்பு நல்குமாறும் மேலும் தெரிவிக்கின்றது.

### கால்நடைகள் திருட்டு

(அரியாலை)

சாவகச்சேரி பகுதியிலுள்ள மறவன்புலோ, கோயிலாக்கண்டி, தனங்கிளப்பு ஆகிய இடங்களில் அடிக்கடி கால் நடைகள் திருட்டுப்போவதாக தெரியவருகின்றது. 59

### வருடாந்த உற்சவம்

[யாழ்ப்பாணம்]

இணுவில சிவகாமி அம்மன் கோயில வருடாந்த உற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

16ம் திகதி தேர் உற்சவமும், 17ம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறும். 59

### மாதாந்த கொடுப்பனவு

(கொழும்புத்துறை)

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள காசநோய், தொழுநோய், ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பெப்ரவரி மாதக்கொடுப்பனவு தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

இக்கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் தத்தமது பகுதித் தபால் அலுவலங்களில் நேரில் சென்று பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. - 154

### மணிவாக்கு

புகழ்ச்சியே கூடாது என்று சிலர்நினைக்கிறார்கள். எது அழகுமயமானது என்பதை நாம் புகழாமல் போனால் நாம் அழகைப்பற்றிச் சிந்திப்பதையேமறந்து விடுகிறோம்.

- ஆஸ்கார் ஒயில்டு

## நமது நோக்கு

### தும்புத் தொழில்

ஒரு நாட்டின் பொருண்மிய வளர்ச்சி என்பது அந்த நாட்டிற் கிடைக்கும் மூல வளங்களைப் பயனுள்ள நுகர்வுப் பொருட்களாக மாற்றிப் பாவிக்கும் திறனிற் தங்கியுள்ளது.

இங்கு — நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்?

பிற இடங்களிலிருந்து வரும் பொருட்களே சிறந்தது என்றும், அவற்றை வாங்கிப் பாவிப்பதே கௌரவம் என்ற மாயையிற் சிக்கிவிட்டோம்.

அதனால் — உள்ளூரிலேயே உற்பத்தி செய்யக் கூடியவற்றை ஏளனமாகப் பார்த்ததினால் ஏற்பட்ட விளைவு என்ன?

வறுமைக் கோட்டிற்குக் கீழே செல்வோர் தொகை வேகமாகவே அதிகரித்து வந்துள்ளது.

பொருளாதாரத் தடைகள் போட்டு, எமது மக்களை நாதியற்றவர்களாக ஆக்கும் அரசிடமிருந்து ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை எதிர்பார்க்கலாமா?

நாமே சிந்தித்து, நமது வளத்தை நாமே பெருக்க வேண்டிய கட்டாய நிலை தோன்றியது.

அந்த வகையில் — தும்புத்தொழிலுக்கு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கொடுக்கும் ஊக்கத்தை உணர்ந்துகொள்ள வேண்டும்.

வேலி அடைத்தல் போன்ற பல நாளாந்த வேலைகளுக்குக் கயிறு, தும்புத்தடி போன்ற பல பாவனைப் பொருட்கள் இங்கு கிடைக்கும் தென்னந் தும்பிலிருந்தே எளிதாகச் செய்யலாம்.

குடிசைக் கைத்தொழில் மூலம் இதனைச் செய்யும் போது குடும்ப உறுப்பினர் அனைவருக்குமே வருமானம் கிடைக்க வழிபிறக்கும்.

முன்பு — இத்தொழில் நன்கு வளர்ச்சிபெற்றிருந்தது.

இடையிலே—அரசபணியைப் பெறுவதற்கே கல்வி என்று கருத்து வலுப்பெற்று வந்ததால் நாட்டம் குறைந்துவிட்டது.

தொழில் முன்னிலைப் பாடமாக இருந்த தும்புத் தொழில் இன்று எத்தனை பாடசாலைகளில் ஊக்குவிக்கப்படுகின்றது?

பாடசாலைகளுக்குரிய தும்புத் தடிகளை அப் பாடசாலை மாணுக்கரே உற்பத்தி செய்கிறார்களா?

## சென்னை சிறையிலிருந்து
# விடுதலைப் புலிகள் தப்பியது குறித்து உயர் விசாரணைக்கு பணிப்பு!

]சென்னை]

சென்னை மத்திய சிறையிலிருந்து ஒன்பது விடுதலைப்புலிகள் தப்பிச் சென்றது குறித்து விசாரிக்கஓய்வுபெற்றசென்னை உயர்நிதிமன்ற நீதிபதி டி. ராமானுஜம் நியமிக்கப்பட்டுள்ளார்.

சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியுடன் நடத்திய ஆலோசனைக்குப் பின்னர் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இந்த நியமனத்தை வழங்கினுர்.

சென்னை மத்திய சிறையிலிருந்து புலிகள் தப்பிச் சென்றதற்கான காரணம் அதற்கான சூழ்நிலை ஆகியனவை குறித்து விசாரித்து அறிக்கை தருமாறு விசாரணைக் கமிஷன் கேட்கப்பட்டுள்ளது.

கைதிகள் தப்புவதற்குக் காரணமாக இருந்த சிறை அதிகாரிகள் ஊழியர்கள் பற்றியும் இதற்கு உடந்தையாக யாரும் இருந்தார்களா என்பது பற்றியும் விசாரிக்கும்படி விசாரணைக் கமிஷன் கேட்கப்பட்டுளளது.

நீதிபதி திரு, இராமானுஜம் மூன்று மாத காலத்துக்குள் அரசுக்கு அறிக்கை சமர்ப்பிப்பார். ரி

# கைதிகள் மீது தாக்குதல்; 19 வார்டன்கள் மீது வழக்கு

(சென்னை)

சென்னை மத்திய சிறையில் இருந்து விடுதலைப் புலிகள் தப்பிச்சென்றதை அடுத்து சிறைக்குள் இருக்கும் கைதிகள் மீது தாக்குதல் நடத்தியதாக கூறப்படுவது தொடர்பாக 19 வார்டன்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சென்ற வியாழக்கிழமை அன்று சென்னை உயர்நீதிமன்றம் கேட்டுக்கொண்டதற்கிணங்க தனி நீதிமன்ற நீதிபதி திரு. வீ. கிருஷ்ணன் மத்திய சிறைக்குச் சென்று பார்வையிட்டபின் சமர்ப்பித்த அறிக்கையை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

-ரி-சி

### நேர்முக பரீட்சை

(நெல்லியடி)

யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தில் உள்ள வைத்தியசாலைகளில் பணிபுரியும் ஊழியர்களிடையேயான நான்கு பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சை அண்மையில் பிராந்திய பணிமனையில் நடைபெற்றது. 160

### நான்குவார உலர் உணவுப் பொருட்கள்

[ஆனைப்பந்தி]

திவக பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பாவனையாளர்களுக்குரிய சென்றவருட டிசம்பர் மாத நான்குவார நிவாரண உணவுப்பொருட்கள் தற்போது அந்தந்த சங்கங்களின் நிவாரணக் கிளைகளில் விநியோகிக்கப்படுகின்றன.

புதிய நிவாரண உணவு முத்திரையின் 22ஏ, 22பி இலக்க புள்ளிகளுக்கே இவ் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றன. 101

## கைதிகள் தப்பிச் சென்றதற்கு
# மூன்று அதிகாரிகளுக்கு தொடர்பு உள்ளது

[சென்னை]

விடுதலைப் புலி கைதிகள் சிறையிலிருந்து தப்பிச் சென்றதில் தமிழக காவல்துறையின் மூன்று உயர் அதிகாரிகளுக்கு தொடர்பு இருக்கிறது என்று ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியம்சுவாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த அதிகாரிகளை ஜனாதிபதி தனது அரசியல் சாசன அதிகாரத்தைப் பயன்படுத்தி பதவி நீக்கம் செய்யவேண்டுமெனவும் அவர்கேட்டுள்ளார்,

இந்தக் கைதிகள் சிறையிலிருந்து தப்பியது விடுதலைப் புலிகள் மற்றும் தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆகியோரின் கூட்டு நடவடிக்கை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். ரி

### அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் தென்மராட்சிப் பகுதியில் உள்ள மிக வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மொத்தம் 42 பேருக்கு கடந்த வாரம் இலவசமாக மூக்குக் கண்ணுடிகளை வழங்கினர் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. 154

### இலவச வைத்திய சேவை

(கொழும்புத்துறை)

யாழ். நாயன்மார்கட்டு சன சமூகநிலையத்தில் இயங்கிவரும் சிவபரன் பாலர் பாடசாலையில் கல்வி கற்கும் சிறுவர்களுக்கு இலவச வைத்திய சேவை நாயன்மார்கட்டு வைத்தியகலாநிதி திருமதி திலகவதி கோபாலரத்தினத்தினுல் அண்மையில் சிறுவர்பாடசாலையில் நடாத்தப்பட்டது. பத்தொன்பது குழந்தைகள் இதனுல் பயன்பெற்றனர்.

-154

# அகதிகள் முகாமுக்கு பலத்த பாதுகாப்பு

(சென்னை)

தமிழ்நாடு புதுக்கோட்டை மாவட்டத்தில் பல அகதிகள் முகாம்களிலிருந்த 200 க்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகள் பலத்த பாதுகாப்புடன் சென்னைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

சென்னையிலிருந்து நாளை இவர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள்,

இவர்களை தற்போது தங்க வைத்துள்ள சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சி வளாகத்திற்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. -ரி

## இராசி பலன்

**06-03-1995**

திங்கட்கிழமை

(தமிழுக்கு மாசி -22)

பஞ்சமி முன்னிரவு 10-00 வரை, பரணி முழுவதும், சித்தயோகம், இராகுகாலம் காலை 7-56 முதல் 9-26 வரை, சுபவேளை நண்பகல் 12-26 முதல் 1-56 வரை.

மேடம்: எதிர்பாராத உதவி, அதிகாரிகள்பாராட்டு, பெருமை.

இடபம்: குறும்புத்தனம். பிறர்வெறுப்பு, பணமுடை.

மிதுனம்: அதிக வசதி, சுப காரியம், கலகலப்பு:

கடகம்: தொழில் முயற்சி, நண்பர் சகவாசம், உல்லாசம்.

சிங்கம்: குழப்பமடைதல், மனைவி துன்பம், அலைச்சல்.

கன்னி: கண்கலங்குதல், மாதாவெறுப்பு, காரியதடை.

துலாம்: பொதுப்பணி, விரோத சிந்தனை, தான தர்மம்,

விருச்சிகம்: கலந்து பேசல், மறக்கமுடியாத நினைவு, புகழ்.

தனுசு: அடிமைநிலை, சினங் கொள்ளல், துயரம்

மகரம்: பணியாள் வெறுப்பு வீண்பிரயாசம், காரியதடை.

கும்பம்: குடும்பமகிழ்ச்சி, நற் செய்தி, தெய்வ தரிசனம்.

மீனம்: தொழில் துயரம், கெட்டகனவு, யோசனை.

— ஜோஸ்யர்

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995-03-06**

திங்கள் இரவு

08-01 தளிர்கள் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
08-20 எங்களின் தேசம்
08-30 செய்திகள்
08-40 தரிசனம்- நிகழ்ச்சியில் திருமதி ஞானரூபி கருணுகரன் அவர்களுடனை செவ்வி என்பன இடம்பெறும்.

**1995—03-07**

செவ்வாய் காலை

07 02 மாவீரவணக்கம்
07-15 இன்றைய தாரகை
07.30 செய்திகள்
07 35 பத்திரிகைச் செய்திகள்
07-40 தாயகப் பாடல்கள் என்பன இடம்பெறும்

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995-03-06**

திங்கள் மாலை

05-01 சிந்தனை சிதறல்
05-02 எழுச்சிக் கீதம்
05-10 புதியவை
05-15 ஆழியமுதம்
05-30 மாணவர் பக்கம்
06-00 சிந்தனைக்கு சிலவினுடிகள்,
06-02 நேயர் நெஞ்சம்
06-15 விளையாட்டுச் செய்திகள்
06-20 என்தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

## பலதும் பத்தும்

### உலகை அறிந்திட

வளர்ந்து வரும் போட்டி பொருளாதாரத்தில் நாடுகளின் அரசியல். சமூக, பொருண்மியத் தரவுகள், தகவலகள் இன்று பலருக்கும் தேவைப்படுகின்றன அல்லவா? இவற்றை எங்கு எப்படி அறியலாம்?

'ரீடர்ஸ் டைஜஸ்ட்' போன்ற பிரபல சஞ்சிகைகள் ஆண்டுதோறும் அல்மனுக்' (Almnac) போன்ற தகவல் திரட்டுகளை வெளியிடுகின்றன.

ஒவ்வொரு நாட்டிலும் தமது நாட்டுத் தகவல்களை முதன்மைப்படுத்தி ஏனைய நாட்டு விபரங்களைச்சுருக்கி வெளியிடும். பிரசாரத்திற்காக வெளிவருபவை பற்றிக் கவனமாக இருக்க வேண்டும்.

அமெரிக்க CIA உளவு நிறுவனம்கூட 'உலகஉண்மை நூல்' (World Fact Book) வெளியிடுகிறது. 'குயிட்' (Quid) என்ற தகவற்களஞ்சியம் நம்பகத்தன்மை கொண்ட சிறந்த கையேடு ஆனுல் அது பிரெஞ்சு மொழியில் தான் வருகிறதாம்.

— மயூரன்

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. ச. சத்தியசீலனின் ''இலங்கை அரசியலில் மொழியும் மதமும்'' ''இலங்கை இனப்பிரச்னையின் பொருளாதார மூலங்கள்'' ஆகிய நூல்கள் வெளியீட்டு விழா யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கத்தில் இன்று 6ம் திகதி திங்கள் பிற்பகல் 4 மணிக்கு சமூக விஞ்ஞான மன்றத் தலைவர் திரு. செல்வராஜா ரமேஷ் தலைமையில் நடைபெறும்.

### தவக்கால நற்சிந்தனை

''முறையோடு உன் பிறனுக்கு நீதி வழங்கு'' (லேவி 19:)

கடவுளுடைய திருச்சட்டம் கூறுவது என்ன? நாம் நீதிவழுவாது வாழவேண்டும் என்பதே. நீதிக்குப் புறம்பாக நாம் அநீதியான காரியங்களில் செயல்படும் போது அநீதர்கள் ஆகிறோம். இதனைக் கடவுள் அடியோடு வெறுக்கிறார். அன்பு செய். அன்பைப் பெறுவாய் என்றார். நாம் எம் வாழ்நாளில் எதிலும் எதற்கும் நீதியோடு செயல்படுகிறோமா? சிந்தனை செய்வோம்.

தா. மைதிலி

வனம் ஓங்க வளம் ஓங்கும்
வளம் ஓங்க தனம் ஓங்கும்

# அகதிகளைக் கட்டுப்படுத்த கனேடிய அரசு நடவடிக்கை

(ஒன்ராறியோ)

சட்டவிரோத குடியேற்றக்காரர்களை கட்டுப்படுத்தும் வகையில் கனடா தனது நாட்டுக்கான குடியேற்ற கட்டணத்தை அதிகரித்துள்ளது.

இந்தக் கட்டணம் 975 கனேடிய டொலராக இருக்குமென கனேடிய குடியேற்ற அமைச்சர் தெரிவித்துள்ளார். தனியாகவோ அல்லது குழுவாகவோ அண்மைக்காலங்களில் பல வெளிநாட்டவர்கள் கனடாவுக்குள் நுழைய முற்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனை தடுக்கும் நோக்கிலேயே இந்த கட்டண அறவீடு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

19 வயதிற்கு மேற்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு இக்கட்டணம் அறவிடப்படவுள்ளது. கனடாவில் குடியேற்றகாரர்களுக்கு கனேடிய அரசு வழங்கும் சேவைகளை அவதானிக்கையில் இக்கட்டண அறவீடு குறைவானதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அகதிகளுக்கான கனேடிய கவுன்சில் இந்த புதிய கட்டண அறவீட்டை கண்டித்துள்ளது. அகதிகள் மீதான சுமையை மேலும் கூட்டுவதாக இந்த நடவடிக்கை அமைந்துள்ளதாகவும் கூறியுள்ளது. (சி)

# யுவதியிடம் சேஷ்டை இளைஞர் கைது

(ஆனைப்பந்தி)

யுவதியொருவரின் மீது முட்டை எறிந்து சேஷ்டை புரிந்தஇளைஞர் ஒருவர் காவல் துறையினரால் கைதுசெய்யப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை கொட்டடிப் பகுதியைச் சேர்ந்த பிரஸ்தாப இளைஞர் வீதியால் சென்றுகொண்டிருந்த யுவதியொருவரின் மீது முட்டையை வீசியடித்து அவரை அவமானப்படுத்தினர்.

இச்சேஷ்டையை பொறுக்க முடியாத அந்த யுவதி காவல் துறையிடம் புகார் செய்ததாகவும, இதையடுத்து சம்பந்தப்பட்ட இளைஞர் காவல் துறையினரால் கைதுசெய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இளம் பெண்களிடம் சேஷ்டை விட்ட இளைஞர்கள் பலர் காவல்துறையினரால் கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. -101-சி

# யாழ். பண்ணைக் கடலில் ஆணின் சடலம் கரையொதுங்கியது

(ஆனைப்பந்தி)

யாழ். பண்ணைக் கடற்கரையில் நேற்றுக் காலை நடுத்தர வயதுடைய ஆண் ஒருவரின் சடலம் கரையொதுங்கியது.

மேற்சட்டை எதுவுமின்றி நீலக்கோட்டு சாரம் மட்டும் அணிந்திருக்கக் காணப்பட்ட இச்சடலத்தின் வாயிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. முழங்கை, கால் பகுதிகளில் காயங்கள் காணப்பட்டன. நவாலி வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த தவம் செல்வராசா என்பவரே இவரென உறவினர் சிலரால் அடையாளம் காணப்பட்டுள்ளதாக காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

கரையில் இருந்து சுமார் 350 மீற்றர் தூரத்தில் தென்பட்ட இச்சடலத்தை இப்பகுதியில் நின்ற போராளிகளே கரைக்கு எடுத்து வந்தனர். மேற்படி இறந்த நபர் கடந்த சில தினங்களாக யாழ். போதனா வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைபெற்று வந்தவர் என்றும் கூறப்படுகின்றது. -101-சி

# கிரிக்கெட்: அரையிறுதிப் போட்டிக்கு இந்தியா தகுதி

(புதுடில்லி)

உலக மாஸ்ரேஸ் (35 வயதிற்கு மேற்பட்டோர்) கிரிக்கெட் போட்டியின் அரை இறுதி ஆட்டத்தில் பங்குபற்றுவதற்கு இந்திய அணி தகுதி பெற்றுள்ளது.

நேற்று பம்பாயில் தென்னாபிரிக்க அணியை 62 ஓட்ட வித்தியாசத்தில் தோற்கடித்து தொடர்ந்து 2வது வெற்றியை இந்தியா பெற்றது. முதலில் ஆடிய இந்திய அணி, குறிப்பிட்ட 45 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 280 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்ப ஆட்டக்காரர் சிறிகாந்த் மின்னல் வேகத்தில் ஆடி 55 பந்துகளில் 85 ஓட்டங்களைப் பெற்றார். இதில் 14 பவுண்டரிகளும், 3 சிக்ஸர்களும் அடங்கும். வெங்ஸாகர் 105 ஓட்டங்களைப் பெற்றார் தென்னாபிரிக்க அணித் தலைவர் கிளைவ் றைஸ் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

அடுத்து ஆடிய தென்னாபிரிக்க அணி 45 ஓவரில் 6 விக்கெட்டுகளை இழந்து, 218 ஓட்டங்களைப் பெற்றது. இந்திய அணியின் தலைவர் கவஸ்காரைப் போலவே தென்னாபிரிக்க அணித் தலைவர் கிளைவ் றைஸ்ஸும் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டம் இழந்தார்.

இந்திய அணியில் கபில் தேவ், காவ்ரி, வெங்கட்ராகவன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இன்று 'பி' பிரிவு ஆட்டத்தில் இங்கிலாந்து மேற்கிந்திய அணியை எதிர்த்து ஆடும். -சி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு மார்ச் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-

## பிரபாவன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்துவதற்குக் குந்தகமாக அமையலாம்.

அரசாங்கம் இணக்கம் தெரிவித்த தீர்மானங்களை நிறைவேற்றுது பின்னடிப்பதால். சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வதில் முட்டுக்கட்டைகள் ஏற்பட்டுள்ளன என்றார். ம-சி

## தெரிவுக் குழுவிடம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி மூன்று கோரிக்கைகளையும் வலியுறுத்தவுள்ளதாம். ஏற்கனவே இது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற தெரிவுக்குழுவிடம் தனது யோசனையை சமர்ப்பித்திருந்தது. இது குறித்து மேலதிக விபரங்களை தெளிவுபடுத்தும் முகமாகவே 9ம் திகதி கூட்டணியினர் தெரிவுக்குழுமுன் சாட்சியமளிக்கவுள்ளனராம். -சி

## உண்ணாவிரதிகளின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தங்களின் மனிதாபிமானக் கோரிக்கையை ஏற்று, தமக்கு மறுவாழ்வு அளிக்குமாறு உண்ணாவிரதிகள் சார்பில் அரசுக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அரசாங்கம் தமது கோரிக்கைகளை நிறைவேற்றுதுபோனால், நாளை செவ்வாய்க்கிழமை முதல் நீராகாரம் கூட அருந்தமாட்டோம் என உண்ணாவிரதிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நேற்று நீராகாரம் அருந்திய சிலர் வாந்தி எடுத்துள்ளனர். பலர் மயக்க நிலையை அடைந்தனர். எல்லோரும் எழுந்திருக்க முடியாத படுத்த படுக்கையாகவே இருக்கின்றனர். கதைக்கமுடியாத நிலையிலும் உள்ளனர்.

உண்ணாவிரதிகள் விடயத்தில் அரசாங்கம் மனிதாபிமான அடிப்படையில துரித நடவடிக்கையில் இறங்காவிட்டால், அரசாங்கம் பெரும் நெருக்கடியைச் சந்திக்க வேண்டி ஏற்படலாம் எனவும் கூறப்படுகிறது. க-சி

## மீண்டும் போர்

[1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் கேணல் ரத்வத்தை கேட்டுள்ளார்.

மட்டக்களப்பு பிராந்தியத்தில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தையும், இராணுவ முகாம்களையும் நேற்று முன்தினம் பார்வையிட்ட முன்னாள் இராணுவ அதிகாரியான அமைச்சர் ரத்வத்தை, படையினருக்கு என்னவெல்லாம் தேவையோ அவை அனைத்தையும் அரசு வழங்கும் என்றும் தாமே மீண்டும் இராணுவத்தில் இணைந்து போரிட தயாராயிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன், சமாதானப் பேச்சில் தாம் நம்பிக்கை கொண்டிருந்தாலும் ஒருவேளை விடயங்கள் தவறுக போனுல் இராணுவத் தீர்வையே தாம் நம்பவேண்டி வருமென ஜனுதிபதி சந்திரிகாவும் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கவிடயமாகும்.

இதன்மூலம் அரசுபோருக்கு தயாராவதை உணரக்கூடியதாக உள்ளது. இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வுதான் எனக்கூறும் ஜனுதிபதி சந்திரிகா அத்தகைய தீர்வு என்ன என்பதை வெளியே கூற மறுத்து வருகிறுர். திருமதி சந்திரிகா அவ்வாறு வெளியே கூறினுல் விடுதலைப் புலிகள் அதை நிராகரிக்கக்கூடுமென திருமதி சந்திரிகா அஞ்சுவதாகவும் அச்செய்தி தெரிவித்தது. -சி

# லண்டன் விபத்தில் தமிழ் தம்பதியர் பலி

(லண்டன்)

லண்டனில் இடம்பெற்ற கார் விபத்தொன்றில் வவுனியாவைச் சேர்ந்த தமிழ் தம்பதியர் ஸ்தலத்திலே உயிரிழந்துள்ளனர் மூவர் படுகாயமடைந்தனர்.

ஜேர்மனியில் கடந்த பத்து வருடங்களாக வசித்துவரும் இந்த தமிழ் தம்பதியர் லண்டனிலுள்ள தமது உறவினரின் குழந்தையின் பிறந்ததின விழாவில் கலந்துகொண்டுவிட்டு திரும்பிச் செல்கையிலேயே இந்த விபத்து இடம் பெற்றது.

விபத்தில் படுகாயமடைந்த மூவரில் இருவரது நிலை கவலைக்கிடமாயிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## பிரபாவை சந்திக்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காலை இங்கு வரும் இக்குழுவினர் பல தரப்பினரையும் சந்திப்பதற்கு ஏற்பாடாகியுள்ளது. இவர்கள் பல இடங்களையும் நேரில் சென்று பார்வையிடவுள்ளனர்.

இக்குழுவிடம் தற்போதைய அரசியல் சூழ்நிலைகள் குறித்து விடுதலைப் புலிகள் விளக்குவர் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ்ப்பாண நிலைமைகளை நேரில் கண்டறியும் இக்குழுவினர் வெளியிடும் அறிக்கையானது, சர்வதேச மட்டத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் எனவும் கருதப்படுகிறது. -சி

## அலுவலகத்தில் வைத்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது; அமைச்சர் திரு. ஏக்கநாயக்காவின் அலுவலகத்தின்முன்னுல் நடமாடிய இனந்தெரியாத நபர்ஒருவர் நேற்று மாலை அமைச்சரின் பாதுகாப்பு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார்.

மாத்தளைப் பகுதியில் உள்ள அமைச்சரின் அலுவலகத்தின் முன்னுல இந்தநபர் கடந்த சில தினங்களாக நடமாடியுள்ளார். இரகசியத் தகவல் ஒன்றின் மூலம் நேற்று மாலை இந்த நபர் உடனடியாகவே பாதுகாப்பு அதிகாரிகளினுல் சுற்றிவளைத்து பிடிக்கப்பட்டார். இவரிடமிருந்து ரிவோல்வர் ஒன்றும் பொலிஸாரினுல் மீட்கப்பட்டது.

தம்மை கொலை செய்யவே இந்த துப்பாக்கி நபர் முயற்சித்துள்ளதாக தமக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாக பிரதி அமைச்சர் ஏக்கநாயக்கா தெரிவித்துள்ளார்.

இது குறித்து மாத்தளைப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகிறுர்கள். (சி)

## தீர்வுத் திட்டம்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; அரசாங்கம் அனுப்பி வைத்துள்ள தீர்வு திட்டம் பற்றிய கடிதத்திற்கு விடுதலைப் புலிகளிடம் இருந்து இது வரையில் பதில் வரவில்லை. ஆயினும் வடக்கு கிழக்கில் அமைதித்தீர்வு காண்பது குறித்து அரசாங்கம் எடுக்கும் முயற்சிகள் நல்ல பலனளித்துள்ளன.

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் அமுல்படுத்தப்படும் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் நல்ல முறையில் பின்பற்றப்பட்டு வருகிறது. யாழ்ப்பாணம், திருமலை, அம்பாறை போன்ற பிரதேசங்களை அபிவிருத்தி செய்வது குறித்து திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. ஆனுலும் இத்திட்டங்கள் சமாதான சூழ்நிலை அவசியம்.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் சமாதானம் தொடர்பாக, விடுதலைப் புலிகள் உட்பட ஏனைய அமைப்புக்கள் மிகவும் ஆர்வமாக இருப்பதாகவும். இது விடயத்தில் அந்த அமைப்புக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கும் எனத் தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார். க-சி

## வருடாந்த உற்சவம்

(பண்டத்தரிப்பு)

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி ஆலய வருடாந்த உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று, இம்மாதம்16ம்திகதி இரதோற்சவமும்' மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும்,-72

## சகல அம்சங்களையும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் கூறுகையில்;

எமது கலை இலக்கிய படைப்பாளிகள்தினம், தினம் தீக்குளித்தபடியும் வாழ்வும் சாவும் எமக்கு இந்த மண்ணில் தான் என்ற படியும் தங்கள் கலை இலக்கியப் படைப்புக்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறுர்கள்.

எம்மிடம் ஒரு தேசிய வானொலி உண்டு, தேசியக் கொடி உண்டு. ஒரு தேசிய நிர்வாக கட்டமைப்பு உண்டு. எம்மக்களின் நெறிசவருத வாழ்வுக்கு உத்தர வாதம் கொடுக்கும் காவல் துறை உண்டு. நீதிமன்றங்கள் உண்டு. தேசிய பொருண்மிய வளர்ச்சிக்கான அமைப்புண்டு, எமது தேசிய கலை இலக்கிய பண்பாட்டு இலக்கிய வாழ்வுக்கென கழகம் உண்டு. இன்று எல்லாவற்றையும் நெறிப்படுத்தி இலக்கு நோக்கி நடாத்திச் செல்வதற்கு எமது தேசிய தலைவர் இருக்கின்றுர்.

எலிவளையானுலும் தனிவளையாக இருக்க வேண்டும். எந்த மனிதனுக்கும் அவன் வீட்டு முற்றத்தில் இருக்கும் மரத்தின் நிழலே இதமளிக்கும் உலகக் கூரையின் கீழே நாங்கள் ஒன்றுனுலும் எங்கள் வேலிக்குள்ளேயே நாங்கள் உன்னதம் பெறுவோம். இந்த உண்மையின் வழியே தொடர்ந்து முன்னேறுவோம்.

1*90-ம் ஆண்டுகளுக்கு பின்னர் இந்த மண் உயிர்ப்பிழந்து போய்விடும் தனது இருப்பை இழந்து ஈழத்தமிழினம் இல்லாதழிந்து விடும். எமது போராட்ட வாழ்வு எம் மக்களின் அன்றுட வாழ்வைப் பொசிக்கி விடும். என்று உலக நாடுகள் எண்ணின எம்மை அடக்கிய எதிரியும் இப்படித்தான் கனவு கண்டான். ஆனுல் எமது தலைவரும், எமது போராளிகளும் எமது மக்களும் எமது கலைஞர்களும் இலக்கியப் படைப்பாளிகளும் இணைந்து கடந்த ஐந்து வருடங்களாக இந்த மண்ணிலே உற்சாகத்துடன் நடாத்திவரும் போராட்டத்தை உலக நாடுகள் எதிர்பார்த்ததற்கு மாறுகவும், எமது எதிரி எண்ணியதற்கும் வேறுகவும் அமைத்து விட்டார்கள்.

இந்த வேளையிலே நாளை எம் மண் விடியும் போது அந்த விடிவுக்கு நாம் காரண கர்த்தாக்கள் என்று நெஞ்சு நிமிர்த்தி நிற்கக்கூடியதாக நாம் எல்லோரும் ஒன்றிணைவோம்.'' என்றுர்'

(ம - சி)